1969 மார்ச் 24]

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, with regard to the climatic conditions, the Hosur taluk stands on a different footing. It is very cold there for four months. Our present Hon. Minister for Public Works, who visited the place last year found the patients lying on ground and also on mats and he also expressed sympathy for them. So, keeping these aspects of the matter in the mind, will the Hon. Minister for Public Health be pleased to give top priority and provide beds not only to the hospital in Hosur but also to the hospital at Denkanikotta.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : டெங்கனிக் கோட்டை பற்றிய குறிப்பு இல்லே. ஹோசூரில் 44 படுக்கைகள் கொண்ட அவுட் பேஷண்ட் ப்ளாக், லேபர்-கம்-ஆப்பரேஷன் தியேட்டர், இன்பெக் ஷியல் டிவீஸஸ் வார்டு, மார்ச்சுவரி பிளாக், கட்டுவதற்கும், இரண்டு மருத்துவ அதிகாரி இல்லங்களும், ஆறு செவிலியர் இல்லங்களும், இரண்டு மருத்துவத் துணை அதிகாரி இல்லங்களும் கட்டுவதற்குச் செயற்குறிப்புகள் உள்ளது. நிதிப் பற்ருக் குறை காரணமாக 1970-71-ம் ஆண்டில் எடுத் துக் கொள்வதாக குறிப்பு இருக்கிறது.

உதகையில் நடுத்தர வகுப்புப் பயணிகள் விடுதி.

வின. *443 திரு கே. போஜன் : மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை யளிப்பாரா.—

(அ) கோடை காலங்களில் உதகைக்கு வரும் நடுத்தர வகுப்புப் பிரயாணிகள் குறைந்த கட்டணத்தில் தங்கக்கூடிய பிரயாணிகள் விடுதி ஒன்று கட்டிக் கொடுக்கும், செயற்குறிப்பு ஏதேனும் சர்க்காரிடம் உள்ளதா

(இ) ஆம் எனில், இந்த விடுதி எப்பொழுது கட்டப்படும் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) உதகையில், மாணவர்கள், மற்றும் சுற்றுலாப் பயணிகள், இரு வருக்கும் பொதுவாக உதவும் வகையில் ஒரு சுற்றுலாப் பயணிகள்-மாண வர்கள் விடுதி கட்டுவது பற்றிய கருத்து பரிசீலனேயில் இருந்து வருகிறது.

(இ) இது எப்போது முடிவுபெறும் என தற்போது கூற இயலாது.

திரு கே. போஜன் : தற்போது உதகையிலுள்ள சர்க்கார் டூரிஸ்டு பங்களாவில் அதிக வருவாய் உள்ளவர்கள்தான் தங்க முடியும். தனிப் பட்டவர்கள் நடத்தும் ஓட்டலிலும் அதிகச் செலவாகிறது. ஆகவே, குறைந்த வருவாய் உள்ளவர்கள் தங்குவதற்கு வசதி இல்லாமல் இருக் கிறது. குறைந்தவருவாய் உள்ளவர்கள் தங்கும் அளவுக்கு ஒரு விடுதி ஒன்றை அரசாங்கம் கட்ட முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அங்கே பயணி கள் நிரந்தரமாக ஆண்டு பூராவும் வருவது கிடையாது. ஒரு ஆண்டில் மூன்று மாதங்கள்தான் அங்கு வருகிருர்கள். அப்படிப்பட்ட நிலேயில் அதற்காகப் பல பெரிய கட்டிடங்களேக் கட்டுவதற்கேற்ற வசதி இல்லே. ஆனல், பருவ காலத்தில் வருகின்றவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டு மென்பதற்காக ஒரு புதிய திட்டத்தை மறைந்த பேறிஞர் அண்ணு அவர்கள் கூறினர்கள். உதகையில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கான விடுதி ஒன்றைக் கட்டி, பள்ளி நாட்கள் முடிந்த பிறகு அதிலே பயணிகள் தங்குகின்ற அளவுக்கு ஏற்பாடு செய்யலாம் என்று திட்டமிட்டிருக்கிருர்கள். அதற்காக ஒரு பெரிய கட்டடத்தைக் கட்ட வேண்டுமென்ற விருப்பத்தைத் தெரிவித்தார்கள். அதற்காக விஜயநகரம் எஸ்டேட் என்ற பகுதியில் உள்ள இடத்தைக் கேட்டோம். அது உதகை வேளாண்மைத் துறைக்குச் சொந்தமான இடம். அவர்கள் அதைத் தர மறுத்துவிட்டார்கள். தற்

போது ஸ்டோன் ஹவுஸ் ஹில் என்ற இடத்தைக் கேட்டிருக்கிறோம். அது தகுதியான இடம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார். அந்த இடம் கிடைத்த பிறகு மாணவர் விடுதி கட்டுவதன் மூலமாக விடுமுறைக் காலத்தில் பயணிகள் அங்கு தங்கும் வகையில் புதிய திட்டம் இருக்கிறது.

கஸ்தூரிபா காந்தி கன்னியா கு நகுலம்.

வினா—*444 : திரு. ந. தருமலிங்கம் : மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேதாரண்யம்–மகராஜபுரம், கஸ்தூரிபா காந்தி கன்னியா குருகுலத்திற்கு நமது அரசு செய்துவரும் உதவிகள் யாவை ?

(இ) இந்தக் குரு குலத்திற்கு மேலும் உதவிகள் செய்யும் செயற்குறிப்பு எதுவும் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) வேதாரண்யம், மகராஜபுரத்திலுள்ள கஸ்தூரிபா காந்தி கன்னியா குருகுல அனாதை இல்லம் பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளி ஒன்றினையும், அனாதை இல்லம் ஒன்றினையும் நடத்தி வருகிறது. கீழே விவரமாகக் கொடுக்கப்பட்டுள்ளவாறு, மானிய உதவி விதிக் கோவையில் விதித்த முறைகளுக்கிணங்க இந்த நிலையங்களுக்கு அரசாங்கம் உதவித் தொகை வழங்குகிறது.

		சிறுவர்களுக்கான விடுதி.	உயர்நிலைப் பள்ளி.
1966–67	..	ரூ. 8,631	ரூ. 1,157.
1967–68		ரூ. 6,917	ரூ. 1,334.

கஸ்தூரிபா காந்தி கன்யா குருகுலம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கருவிகள் முதலியவற்றை வாங்குவதற்கான மானியமாக 1967–68–ல் ரூ. 4,400 வழங்கப்பட்டுள்ளது.

(இ) இல்லை.

Another dam across Cauvery near Mettur Dam.

*445.—*Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal before the Government for the construction of another dam across the river cauvery either at the upstream or at the downstream of Mettur Dam ?

மு.ப 9–39 **மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

திரு. நா. காசிராமன் : மழை காலங்களில் அதிகமாக வருகிற தண்ணீர் கடலில் விடப்படுகிறது. ஆகவே, ஹொகனக்கல்—மேட்டூருக்கு இடையே நடுவில் ஒரு அணை கட்டி அத் தண்ணீரைத் தேக்கினால் மழை இல்லாத காலத்தில் அது பயன்படுமென்று முன்பு பொதுவாகப் பேசப்பட்டு வந்ததே, அது எப்போது எடுத்துக்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு மேற்புறத்தில் ஹொகனக்கல் அருகில் ஓர் அணையைக் கட்ட சில தொடக்க ஆய்வு வேலைகளை மேற்கொள்ளப்பட்டன கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பாசன வசதி ஒன்றும் கிடையாது.